# திருவருகைக்காலத்தின் முதல் ஞாயிறு

## 1 ஆம் ஞாயிறு

## முதலாவது திருவழிபாடு ஆண்டு

### இன்றைய வாசகங்கள்:

இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து வாசகம். 2:1-5

பதிலுரைப்பாடல் திபா: 122: 1-2, 4-9

திருத்தூதர் பவுல் உரோமையருக்கு எழுதிய

திருமுகத்திலிருந்து வாசகம் 13: 11-14

மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 24: 37-44

## திருப்பலி முன்னுரை:

இறைமக்கள் அனைவருக்கும் அன்பு வணக்கம். இன்று மிகச் சிறப்பான முறையில் உங்கள் அனைவரையும் வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகிறேன். இன்று புதிய வழிபாட்டு ஆண்டைத் துவக்குகிறோம். மூன்றாண்டு சுழற்சியில் நிகழும் திருவருகைக் காலம் முதல் புதிய சுழற்சியில் முதலாம் ஆண்டு இனிவரும் நாட்களில் எடுத்துக்கொள்ளப்படும். நாம் தொடங்கியிருக்கும் இக்காலம் புதிய எண்ணங்களோடும் உந்துதலோடும் நாம் இறைவனுடைய செயல்களில் மிகுந்த ஆர்வமுடன் ஈடுபட்டு நமக்கு இது மீட்பின் காலமாகிடவும் நாம் உலகுக்கு ஒளியேற்றி வாழ வழிவகுப்போம். கிறிஸ்து எனும் மெசியா நம் அருகில் இருக்கிறார். நமக்கு நன்மைகளைச் செய்வதற்காக, தீமைகளை அகற்றுவதற்காக அவர் தனது முடிவில்லாத் திட்டத்திற்குச் செயல்வடிவம் கொடுப்பதற்காக நம்மைத் தேடி வருகிறார்.

இத்தகை மனநிலையால் புதிய தீர்மானங்களுடன் புதுவாழ்வு தொடங்கிட,

தூய பவுல் கூறியதுபோல தீயனவற்றைத் தவிர்த்து புதிய சிந்தனையோடு எழுக.

இருளின் ஆட்சிக்குரிய தீய நாட்டங்களைக் கை விடுக.

இயேசுவை அணிந்தவர்களாய் நன்மையின் செயல்பாடுகளைச் செய்க.

இத்தகை தூய எண்ணங்களை புதிய உணர்வுகளோடு செயல்படுத்த முழு விருப்பம் கொண்டவர்களாய் திருவருகைக் காலத்தைத் தொடங்குவோம். இத்தகை தூய எண்ணங்களை புதிய உணர்வுகளோடு செயல்படுத்த முழு விருப்பம் கொண்டவர்களாய் திருவருகைக் காலத்தைத் தொடங்குவோம். திருப்பலியில் பங்கேற்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**1. விழித்திருக்க அழைப்பவரே இறைவா,**

உமது திருமகனின் வருகைக்காக இந்த உலகை விழிப்புடன் தயார் செய்யும் வரத்தை, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவருக்கும் நிறைவாய் அளித் திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**2. ஆதரித்துக் காக்கும் இறைவா!**

ஆயனில்லா ஆடுகள்போல இன்று தவித்து நிற்கும் மக்களை கருணையுடன் கண்ணோக்கிப் பாரும். அவர்களின் துன்ப துயரங்களைப் போக்கி, அவர்கள் சரியான திசையை நோக்கிப் பயணிக்கவும், என்றும் அமைதியையும், உடல் நலத்தையும், பாதுகாப்பையும் பெற்று வாழவும், உமது அன்பின் சிறகுகளுக்குள் அவர்களை வைத்துக் காத்திடவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**3. உறவின் ஊற்றே இறைவா!**

இன்றைய நாட்களிலே குடும்பத்தின் புனிதத் தன்மைக்கும், உறவுக்கும், ஒற்றுமைக்கும் எதிராக இருக்கும் எல்லாச் சக்திகளையும் முறியடித்து: குடும்பங்களிலே அன்பும், ஒற்றுமையும், தோழமையும், புரிந்துணர்வும் நிலைபெற்று: குடும்பங்கள் திருக்குடும்பத்தின் தன்மைகளைக் கொண்டு வாழ அருளாசீர் அளித்திடவேண்டுமென்றும்: பிரிந்திருக்கும் குடும்பங்களை ஒன்று சேர்த்திடவேண்டுமென்றும் இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**4. உன்னை விரும்புவோர் வளமுடன் வாழ்வார்களாக! உன் கோட்டைகளுக்குள் அமைதி நிலவுவதாக! உம் மாளிகைகளில் நல்வாழ்வு இருப்பதாக! என்ற உன்னத வாழ்த்தை எமக்களித்த தந்தையே!**

நாங்கள் இருளின் ஆட்சிக்குரிய செயல்களைக் களைந்து விட்டு, களியாட்டம், குடிவெறி, கூடா ஒழுக்கம், காமவெறி, சண்டைச்சச்சரவு, ஆகியவற்றைத் தவிர்த்து தீய இச்சைகளைத் தூண்டும் ஊனியல்பின் நாட்டங்களுக்கு இடம் கொடுக்காது என்றும் விழிப்புடனிருந்து செயல்பட எமக்கு அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**5. உன்னைப் படைத்தவரை உன் வாலிப நட்களில் நினை என்று சொன்ன எம் இறைவா!**

இளைஞோர் தங்கள் வாழ்வில் நல்ல சிந்தனைகளையும், நற்செயல்களிலும், விசுவாச வாழ்வில் நிலைத்து நின்று கிறிஸ்துவின் மதிப்பீடுகளை தங்கள் வாழ்வில் எந்நாளும் சான்றுபகர தேவையான அருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.